# ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## (தன்னாட்சி)

[பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது]
[தேசிய தர மதிப்பீட்டு நிறுவனத்தால் ‘A’தரம் (CGPA 3.27) பெற்றது,
[பல்கலைக்கழக மானியக் குழுவால் 1956 விதிப்படி 2(f)&12(B) அங்கீகாரம் பெற்றது]
காட்டேரி, ஊத்தங்கரை (வ), கிருஷ்ணகிரி (மா). தமிழ்நாடு, இந்தியா - 636902

## தமிழாய்வுத்துறை

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு நடத்தும்**

## இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021

**(08.02.2021 - 09.02.2021 - 10.02.2021)**



## தலைப்பு : தமிழ் இலக்கியங்களில் ஆய்வுக்களங்கள்

### கல்லூரியைப் பற்றி

சரித்திரம் சொல்லும் சாதனைகளைத் தன்னகத்தே கொண்டு, கல்விச் சேவையில் கடந்த 20 ஆண்டுகளாக ஏழை, எளிய, நடுத்தர குடும்பத்து மாணவ – மாணவிகளின் வாழ்வு மேம்பட ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றம் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) இயங்கி வருகின்றது. தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றான இக்கல்லூரி கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் தமிழகத்தின் பிற மாவட்ட ஏழை மாணவ-மாணவியரின் உயர் கல்வித் தேவையைச் செவ்வனே பூர்த்தி செய்து வருகின்றது. பெரியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையில் ஆண்டுதோறும் இளங்கலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர் பாடப்பிரிவுகளில் தங்கப்பதக்கம் பெற்று சாதனை புரிவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். இந்தியாவின் முன்னணி நிறுவனங்களிலிருந்து ஆண்டுதோறும் கல்லூரியில் நிகழ்த்தப் பெறும் வளாக தேர்வில் நூற்றுக்கணக்கான மாணவ-மாணவியர் மிகுதியான ஊதியத்தில் வேலை வாய்ப்புப் பெறுவது இக்கல்லூரிக்கு மற்றுமொரு மணிமகுடமாகும். இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் பலர், தொடர்ந்து அரசுப்பணி வாய்ப்புப் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### தமிழாய்வுத்துறையைப் பற்றி

‘தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’ என்ற நோக்கத்திற்காகத் இளங்கலைத்தமிழ் (BA), முதுகலைத்தமிழ் (MA), ஆய்வியல் நிறைஞர் (M.Phil), முனைவர் பட்டம் (Ph.D) தொடங்கப்பட்டது. மேற்கண்ட பாடப்பிரிவுகளில் சேரும் மாணவர்களின் தமிழார்வத்தை மிகுதிப்படுத்தி அதிக அளவில் மதிப்பெண் பெறுவதற்கும் நூறு சதவிகித தேர்ச்சிக்காகவும் தக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. அறிவார்ந்த மாணவர்களை உருவாக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் தலைசிறந்த கல்வியாளர்களை அழைத்துவந்து, தேசிய அளவிலான கருத்தரங்கம், பன்னாட்டு கருத்தரங்கம், பயிலரங்கம், பட்டிமன்றம், சிறப்புச்சொற்பொழிவுகள் போன்றவை நிகழ்த்தப்பட்டன.

**சிறப்புப் பயிற்சிகள் :** மாணவர்களின் திறனை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு இடங்களில் நடைபெறும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி போன்ற போட்டிகளுக்குச் சென்று பரிசு பெற்றுத் திரும்பும் வகையில் அவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். 2013-2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 நாள் பயிலரங்கில் தமிழகத்தின் தலைசிறந்த பேராசிரியர்கள் வருகை புரிந்து ஆய்வுரை நிகழ்த்தினர். 2014-2015- ம் கல்வி ஆண்டில் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளில் இருந்து சிறப்பு பேராசிரியர்கள் வருகை புரிந்து ஆய்வுரை நிகழ்த்தினர். அனுபவம் வாய்ந்த திறமை மிக்க பேராசிரியர்களால் கற்பிக்கப்படுவதோடு மட்டுமின்றி கணினிக் காட்சித்திரை வழியாகவும் (LCD Projector) கற்பிக்கப்படுகிறது. இளங்கலை மாணவர்களுக்கு TNPSC தேர்வுகள் எழுதவும், முதுகலை மாணவர்களுக்குக் கல்லூரி விரிவுரையாளர் தகுதித் தேர்வான SET,NET ஆகிய தேர்வுகள் எழுதவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### கருத்தரங்கம் பற்றி

தமிழ் இலக்கியத்தில் தேவைப்படும் புதிய சிந்தனைகள், கருத்துக்கள், திறனாய்வு அணுகுமுறைகள் போன்றவைப் பற்றிய புரிதலை மாணவர்களுக்கும் ஏற்படுத்தும் வகையில் இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியத்தில் காணப்படும் ஆய்வுக்களங்களை உற்றுநோக்குவதும் அடையாளம் காண்பதும் இக்கருத்தரங்கின் பயனாகும். முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணவர்கள் ஒரு படைப்பை எவ்வாறு அணுகி ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்ற அடிப்படை சிந்தனை பண்புகளை அறிந்து கொள்வதற்காகவும் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தலைமை**

**திருமிகு. வே. சந்திரசேகரன்**
நிறுவனர்,
ஸ்ரீ வித்யா மந்திர் கல்விக் குழுமம், ஊத்தங்கரை.

**முன்னிலை**

**திரு. ஆர். பி. ராஜீ**
செயலர், ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) ஊத்தங்கரை.

**திரு. பெ. வெங்கடாசலம்**
இணை செயலர், ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) ஊத்தங்கரை.

**வாழ்த்துரை**

**முனைவர் த. பாலசுப்பிரமணியன்,**
முதல்வர், ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) ஊத்தங்கரை.

**முனைவர் ந. குணசேகரன்,**
துணை முதல்வர், ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) ஊத்தங்கரை.

**வரவேற்புரை**

**முனைவர் பெ. சுரேஷ்,**
துறைத்தலைவர், தமிழாய்வுத்துறை ஸ்ரீ வித்யா
மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
(தன்னாட்சி) ஊத்தங்கரை

**அறிமுகவுரை**

**முனைவர் ம. இராமச்சந்திரன்,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீ வித்யா
மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
(தன்னாட்சி) ஊத்தங்கரை

**நன்றிரை**

**திரு. கோ. அசோகன்,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீ வித்யா
மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
(தன்னாட்சி) ஊத்தங்கரை.

**கருத்தரங்கக் குழு**

**முனைவர் பெ. சுரேஷ்,** துறைத்தலைவர்
தமிழாய்வுத்துறை ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) ஊத்தங்கரை

**ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர் ம.இராமச்சந்திரன்**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி) ஊத்தங்கரை

**துணை ஒருங்கிணைப்பாளர்கள்**

**திரு. கோ.அசோகன்,** உதவிப் பேராசிரியர்
**திரு. சே.பெருமாள்,** உதவிப் பேராசிரியர்
**திரு. செ.தெய்வம்,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
**செல்வன் கு.பிரதீஷ்வரன்,** ஆய்வியல் நிறைஞர்
**செல்வி ம.இசைமதி,** முதுகலை மாணவி

**கருத்தரங்க உறுப்பினர்கள்**

திரு. லோ. பிரபு, உதவிப் பேராசிரியர்
திரு. வீ. சுதாகர், உதவிப் பேராசிரியர்
திருமதி. கோ. சுகந்தி, உதவிப் பேராசிரியர்
திரு. இரா. இராமதுரை, உதவிப் பேராசிரியர்
திரு. மு. முத்தமிழ், உதவிப் பேராசிரியர்
திருமதி பொ. ஆனந்தி, உதவிப் பேராசிரியர்
திருமதி ச. ஜெயந்தி, உதவிப் பேராசிரியர்
திருமதி வீ. செந்தமிழ், உதவிப் பேராசிரியர்
திரு. தி. சிவா, உதவிப் பேராசிரியர்

**அமர்வு -1**



**பேரா. முனைவர் விஜய் அசோகன்,**
சால்மர்ஸ் பல்கலைக்கழகம், சுவீடன்

தலைப்பு

**சங்க இலக்கியங்களும் நவீன உலகமும**

**நாள் : 08.02.2021**
**நேரம் : பிற்பகல் 2.00**

**அமர்வு -2**



**முனைவர் க. மோகன் காந்தி,**
உதவிப் பேராசிரியர்
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர்

தலைப்பு

**சங்க இலக்கியங்களில் குறிஞ்சி நில வேளாண்மை**

**நாள் : 09.02.2021**
**நேரம் : பிற்பகல் 2.00**

**அமர்வு -3**



**முனைவர் பொருநை. க. மாரியப்பன்,**
உதவிப் பேராசிரியர்
திராவிடன் பல்கலைக்கழகம், குப்பம்.

தலைப்பு

**நவீனத் தமிழ் ஆய்வுக் களங்கள்**

**நாள் : 10.02.2021**
**நேரம் : பிற்பகல் 2.00**

**தொடர்புக்கு**

**முனைவர் பெ. சுரேஷ்** - Cell: 9894647073
**முனைவர் ம.இராமச்சந்திரன்** - Cell: 9360623276

**https://youtu.be/RnFEJOwjlA8**

**ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
(தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (ஏ) கிரேடு பெற்றது.
**பல்கலைக்கழக மானியக் குழுவால் 2(F) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது)**
காட்டேரி, ஊத்தங்கரை - 636 902.

**தமிழாய்வுத்துறை**

**தமிழ் இலக்கியங்களில் ஆய்வுக்களங்கள்**

**இணையவழி மூன்று நாள் பன்னாட்டுக் கருத்தரங்கு**

08.02.2021-10.02.2021

## கருத்தரங்க அறிக்கை

ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) ஊத்தங்கரை, தமிழாய்வுத் துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு நடத்திய இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கு **தமிழ் இலக்கியங்களில் ஆய்வுக்களங்கள்** என்ற தலைப்பில் 08.02.2021-10.02.2021 மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கைக் கல்லூரியின் நிறுவனர் திருமிகு.வே. சந்திரசேகரன் அவர்கள் தலைமையேற்று தொடங்கி வைத்தார். கல்லூரின் செயலர் திரு ஆர்.பி. ராஜீ அவர்களும் துணைச்செயலர் திரு. பெ.வெங்கடாசலம் அவர்களும் கருத்தரங்கத்திற்கு முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் த.பாலசுப்பிரமணியன் அவர்களும் துணை முதல்வர் முனைவர் ந.குணசேகரன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். தமிழ்த்துறை தலைவர் முனைவர் பெ.சுரேஷ் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம. இராமச்சந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தனரை அறிமுகப்படுத்தினார்.

அமர்வு 1

**சங்க இலக்கியங்களும் நவீன உலகமும்** என்ற தலைப்பில் பேரா. முனைவர் விஜய் அசோகன் அவர்கள், சால்மர்ஸ் பல்கலைக்கழகம், சுவிடன் சிறப்புரை ஆற்றினார்கள். தமிழ் மொழியின் தொன்மை, இன்று தமிழ் எப்படி உலகலாவிய மொழியாக வளர்ந்து வந்துள்ளது என்பதைப் பற்றி விரிவாகப் பேசினார். சங்க இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டின் அடையாளமாக விளங்கி வருவதை எடுத்துக்காட்டினார். மாணவர்கள் பலர் ஆய்வு தொடர்பாக வினாக்களைக் கேட்டார்கள். ஆதற்குச் சிறப்பு விருந்தினர் மிக விரிவாகப் பதில் கூறினார். மாணவர்களின் ஆர்வமும் கலந்துகொண்ட பிற கல்லூரி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் ஒத்துழைப்பும் இணைந்து கருத்தரங்களைச் சிறப்புச் செய்தன.

அமர்வு 2

**சங்க இலக்கியங்களில் குறிஞ்சி நில வேளாண்மை** என்ற தலைப்பில் முனைவர் க.மோகன் காந்தி உதவிப்பேராசிரியர், தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நில வகைமைகள், மக்கள், பண்பாட்டு விழுமியங்கள், தொழில், வேளாண்மை போன்றவைக் குறித்து ஆய்வுரை வழங்கினார். சங்க இலக்கியப்பாடல்கள் பலவற்றை எடுத்துரைத்து விரிவுரை நிகழ்த்தினார். மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இது அமைந்தது. மாணவர்களின் வினாக்களுக்குச் சிறப்பு விருந்தினர் விரிவாக விளக்கமளித்தார்.

அமர்வு 3

**நவீனத் தமிழ் ஆய்வுக் களங்கள்** என்ற தலைப்பில் முனைவர் பொருநை க. மாரியப்பன் அவர்கள் திராவிடன் பல்கலைக்கழகம், குப்பம், சிறப்புரை ஆற்றினார். இன்றை நவீன இலக்கிய போக்குகள் பற்றியும் இன்றைய மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய ஆய்வு களங்கள் பற்றியும் விளக்கி பேசினார். மாணவர்களுக்குப் பல அறிய செய்திகளையும் தகவல்களையும் எடுத்துரைத்தார். இறுதியில் மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விரிவாகப் பதில் அளித்தார்.

கருத்தரங்கின் இறுதி நாளில் கல்லூரி முதல்வர் அவர்கள் கடந்த மூன்று நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கு குறித்து தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம.இராமச்சந்திரன் கருத்தரங்க அறிக்கையை வாசித்தார். இறுதியாகத் தமிழ்த்துறை பேராசிரியர் கோ.அசோகன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். அத்துடன் கருத்தரங்கு சிறப்பாக நிறைவுப் பெற்றது. இதில் கலந்துகொள்ள 706 மாணவர்கள் பேராசிரியர்கள் ஆய்வாளர்கள் பதிவு செய்திருந்தனர். ஒவ்வொரு நாளும் சிறப்பாக மாணவர்கள் பங்குகொண்டு சிறப்பித்தனர். பதிவு செய்த அனைவருக்கும் மின் சான்றிதழ் வழங்கப்பட்டது.